இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 137 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 11 – வியாழக்கிழமை 26 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 137: Thiruvalluvar Year - 2055 - Margazhi 11 - Thursday 26 December 2024 - Trichy ★★ 10 Pages ₹5.00

## அய்யா ஆசிரியர் வழங்கிய கைத்தடி நினைவுப் பரிசுக்கு எதுவும் ஈடாகாது!

# தடைகளைத் தகர்த்தவர் தந்தை பெரியார்!

# தந்தை பெரியார் தரணிமயமாகி வருகிறார்!

## பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் – ஆய்வு மையத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 26-**

**பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள எணினி நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போது, "தடைகளைத் தகர்த்தவர் தந்தை பெரியார்" என்றும், "தந்தை பெரியார் தரணி மயமாகி வருகிறார்" என்றும் கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.12.2024) தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

என்ன பேசுவது என்று புரியாமல் நான் விழித்துக் கொண்டிருக்கிறேன். காரணம் நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்கள் எனக்கு அளித்திருக்கக்கூடிய அந்த பரிசை வாங்குகின்றபோது என்னையே நான் மறந்திருக்கிறேன். வாழ்க்கையில் எத்தனையோ பேர் பரிசுகளை நாம் பெற்றிருக்கலாம், வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தப் பரிசுக்கு எதுவும் ஈடாகாது என்பதை நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன். போதும், எனக்கு இது போதும்.

### தமிழ் இனத்துக்காக அயராது பாடுபட்டவர்!

திராவிட மாடல் என்றால் என்ன என்று கேலி செய்து கொண்டிருப்பவர்களுக்கு இந்த கைத்தடி ஒன்றே போதும். தாய் வீட்டிற்கு வந்திருக்கிறேன். தாய் வீட்டிற்கு வருகிறபோதெல்லாம் நான் உணர்ச்சியை, எழுச்சியை தொடர்ந்து பெறுவதுண்டு. ஆகவே, அதை பெற்று நான் இன்றைக்கு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.




தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, பெரியார் திடலில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மய்யத் திறப்பு விழாவில் நேற்று முன்தினம் (24.12.2024), முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்களுக்கு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் "கைத்தடி" மாதிரியை நினைவுப் பரிசாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்ட தமிழினம் ஒற்றுமை பெறவும், சுயமரியாதை உணர்வு பெற்று மேலெழுந்து நிற்கவும், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு, பல்வேறு தியாகங்களைப் புரிந்து நம்முடைய இனத்திற்காக அயராது உழைத்திருக்கக்கூடிய நம்முடைய ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய மறைந்த இந்த நாளில், அவருடைய கருத்துகளை, அவருடைய எண்ணங்களை, அவருடைய போராட்டங்களை, அவருடைய தியாகங்களை, அவருடைய வாழ்க்கை வரலாற்றை நம்முடைய இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லக் கூடிய வகையில் "டிஜிட்டல் நூலகமாக, ஆய்வு மையமாக" இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது!

> **நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்கள் எனக்கு அளித்திருக்கக்கூடிய அந்த பரிசை வாங்குகின்றபோது என்னையே நான் மறந்திருக்கிறேன். வாழ்க்கையில் எத்தனையோ பேர் பரிசுகளை நாம் பெற்றிருக்கலாம், வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தப் பரிசுக்கு எதுவும் ஈடாகாது என்பதை நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன். போதும், எனக்கு இது போதும்.**

'தந்தை பெரியார் அவர்கள் தனது பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னாரே! தந்தை பெரியாரின் தொண்டர்களான நாம் அந்தப் பயணத்தைத் தொடங்கி, இந்த முன்னெடுப்பை செய்திருக்கிறோம்!

அவர் வாழ்ந்த காலத்தில், அவர் பேசிய முற்போக்குக் கருத்துகளுக்காக,

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

## அனைத்து மதத்தவரும் நல்லிணக்கத்தோடு –

# சம உரிமையோடு வாழ அரசு தொடர்ந்து பாடுபடும்!

## கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 26-**

**"அனைத்து மதத்தவரும் நல்லிணக்கத்தோடு சம உரிமையோடு வாழ அரசு தொடர்ந்து பாடுபடும்" என்று கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியுடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற வன்முறையைத் தவிர்த்து, "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டுங்கள்" என்று பொறுமையையும், "ஒருவன் உங்களிடம் எதையேனும் கேட்டால் அவனுக்கு அதைக் கொடுத்து விடுங்கள்" என ஈகையையும், "பகைவர்களையும் நேசியுங்கள்" எனக் கூறி இன்னா செய்தார்க்கும் நன்மையே செய்யும் அன்பையும் விதைத்தவர் இயேசு பெருமான்.

### அன்பின் பாதையை பின்பற்றும் கிறிஸ்தவப் பெருமக்கள்!

போர்களினாலும், வெறுப்புணர்வினாலும் உலகம் அல்லலுறும் இவ்வேளையில் அவர் காட்டிய அன்பு வழி, அமைதி வழி தான் மிகவும் தேவையானதாக இருக்கிறது.

அத்தகைய அன்பின் பாதையை நெறி தவறாமல் பின்பற்றும் கிறித்தவப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையின மக்களின் நலனுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போதெல்லாம் சிறுபான்மையினர் நல ஆணையம், பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையினர் நல இயக்ககம் எனப் பல திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி வந்துள்ளார்.

### திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்கள்!

அவரது வழியில் தற்போதைய திராவிட மாடல் ஆட்சியிலும்,

- ஜெருசலேம் செல்வதற்கான நிதியுதவி 60 ஆயிரம் ரூபாயாக உயர்வு. அதுவும் 2024 முதல் நேரடி மானியமாக அதனை வழங்க ஆணை.
- 8 தொன்மை வாய்ந்த தேவாலயங்களை மறுசீரமைக்க நிதியுதவி.
- கரூர், மதுரை, தேனியில் கூடுதல் கிறிஸ்தவ மகளிர் உதவி சங்கங்கள் தொடக்கம்.
- தமிழ்நாடு முழுவதும் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் மொத்தம் 3 ஆயிரத்து 345 மகளிருக்கு 4.32 கோடி ரூபாய் நிதியுதவி.
- ஏராளமான கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்களுக்குச் சிறுபான்மை அந்தஸ்து.
- கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம். முதலிய பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

### சமத்துவ மாநிலமாக திகழ அரசு பாடுபடும்!

அனைத்து மதத்தவரும், அனைத்து மொழி பேசுவோரும் நல்லிணக்கத்தோடும் சம உரிமையோடும் சமத்துவ மனப்பான்மையுடனும் வாழும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ நமது அரசு தொடர்ந்து பாடுபடும் என்று உறுதியளித்து, அனைவருக்கும் எனது கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.12.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி கிறிஸ்துவ திருச்சபைகளின் அருட்சகோதரிகள் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.